வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-மலர்விழி

தேதி 18.9.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

- கடந்த 6 ஆண்டுகளில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி, சாதனை அளவில் அதிகரித்து இருப்பதாக தலைமை பொருளாதார ஆலோசகர் டாக்டர் அனந்த் நாகேஸ்வரன் கூறி உள்ளார்.
- இன்றைய இந்தியாவில் வேளாண் துறை, வயல்வெளிக்கு வெளியே பல்வேறு துறைகளுக்கு விரிவடைந்து, பன்முகத் தன்மை கொண்டதாக மேம்பட்டு வருகிறது.
- அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால், குறிப்பாக ஜவுளித் துறையில், முக்கிய பலன்கள் ஏற்பட உள்ளன.
- புதுச்சேரியில் இன்று நடைபெற்ற சட்டமன்றக் கூட்டத் தொடரில், ஜிஎஸ்டி சீர்திருத்தங்களை வரவேற்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

வளர்ச்சி-நாகேஸ்வரன்

கடந்த 6 ஆண்டுகளில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி, சாதனை அளவில் அதிகரித்து இருப்பதாக மத்திய நிதி அமைச்சகத்தின் தலைமை பொருளாதார ஆலோசகர் டாக்டர் அனந்த் நாகேஸ்வரன் கூறி உள்ளார். குறிப்பாக இந்த 6 ஆண்டுகள் முழுவதிலும், சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில் துறையில், அதிக வளர்ச்சி எட்டப்பட்டுள்ளதாக, அவர் இன்று கொல்கத்தாவில் பாரத் வர்த்தக சபையின் 125-ஆம் ஆண்டு விழாவில் பேசுகையில் கூறினார். நடப்பு நிதியாண்டின் முதலாவது

காலாண்டில் எட்டப்பட்ட வளர்ச்சி, 2-ஆவது காலாண்டிலும் தொடரும் என, டாக்டர் நாகேஸ்வரன் தெரிவித்தார். கடந்த ஜூலை-ஆகஸ்டு மாத நிலவரங்கள், இதற்கு சாதகமாக உள்ளதாகவும் அவர் கூறினார். சர்வதேச செலாவணி நிதியம் வெளியிட்டுள்ள மதிப்பீடுகளின் படி, 2027-28-ஆம் ஆண்டில் இந்திய பொருளாதாரத்தின் மதிப்பு, 5 லட்சம் கோடி அமெரிக்க டாலராக அதிகரிக்கும் என்று, டாக்டர் நாகேஸ்வரன் மேலும் தெரிவித்தார்.

*<u>ே□வா □ப்தாஹ்-வேளாண்மை-1</u>*

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு, மக்கள் சேவை-நல்லாட்சி என்ற தாரக மந்திரத்தின் அடிப்படையில் நாட்டில் மாற்றங்களையும் முன்னேற்றத்தையும் கொண்டு வர அயராது உழைத்து வருகிறது. வேளாண்சார் செயல்பாடுகளை ஊக்குவிப்பதன் மூலம், பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு, வேளாண் துறையை பன்முகத் துறையாக மேம்படுத்தி இருப்பது குறித்து, இன்று, சேவைத் திருவிழா என்னும், இந்த சிறப்பு தொடரில் காண்போம். ..........

*<u>ே□வா □ப்தாஹ்-வேளாண்மை</u>*

இன்றைய இந்தியாவில் வேளாண்மை, வெறும் வயல்வெளிக்கு உட்பட்ட துறையாக அன்றி, தொடர்புடைய பல்வேறு துறைகளுக்கு விரிவடைந்து வருகிறது. பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் இதுதொடர்பாக அரசு மேற்கொண்டு வரும் முன்முயற்சிகளால், விவசாயிகளுக்கான வருவாய் வாய்ப்புகளும், கிராமப்புற குடும்பங்களின் பொருளாதார நெகிழ்வுத் தன்மையும் அதிகரித்து உள்ளன. வளர்ச்சி திட்டங்களின் எல்லா பலன்களும், எல்லா விவசாயிகளுக்கும் கிடைப்பதை அரசு உறுதிப்படுத்தி வருவதாக, இவ்வாண்டு சுதந்திர தினத்தன்று, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறினார்.........

*__ே□வா □ப்தாஹ்-வேளாண்மை-3(16)__*

பழங்கள், காய்கறிகள் மற்றும் நறுமணப் பொருட்களின் உற்பத்தியில் தற்போது இந்தியா, உலகின் முன்னணி நாடுகளில் ஒன்றாக திகழ்கிறது. உலகின் மிகப் பெரிய பால் உற்பத்தி நாடான இந்தியாவில், பால் பண்ணைத் துறை தற்போது, கிராமங்களின் செழிப்பிற்கு ஆதாரமான தூணாகவே மேம்பட்டுள்ளது. ராஷ்டிரிய கோகுல் இயக்கம் போன்ற முன் முயற்சிகள் மூலம், உள்நாட்டு கால்நடை இனங்களின் எண்ணிக்கை பெருகி வருகிறது. நமது கடல்சார் ஆதாரங்கள் மற்றும் உள்நாட்டு நீர் ஆதாரங்களின் வலுவை வெளிப்படுத்தும் வகையில், மீன்வளத் துறையின் ஏற்றுமதி 20 பில்லியன் டாலரை தாண்டி அதிகரித்து வருகிறது. பிரதமரின் மத்ஸ்ய சம்பதா திட்டத்தினால் இந்தியாவின் மீன்வளத் துறையும் மீன் வளர்ப்புத் துறையும் நவீனமாகி வருகின்றன.

விவசாயிகள் ஒற்றைப் பயிரை நம்பி இருந்த நிலை மாறி, நம் நாட்டில் தற்போது வேளாண்சார் துறைகளின் வளர்ச்சி அதிகரித்து வருவதால், விவசாயிகளின் வருவாய்ப் பாதுகாப்பு உறுதியாகி உள்ளது. வேளாண்சார் துறைகளின் வளர்ச்சியினால், வளங்குன்றா எதிர்காலத்திற்கான எண்ணற்ற வாய்ப்புகளும் திறந்து விடப்பட்டுள்ளன.

*__மோடி-நேபாளம்__*

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று, நேபாளத்தின் இடைக்கால பிரதமர் திருமதி சுசிலா கார்க்கி-யுடன், தொலைபேசியில் உரையாடினார். நேபாளத்தில் அண்மையில் ஏற்பட்ட துயரகரமான உயிர் இழப்புகளுக்கு தாம் இரங்கல் தெரிவித்துக் கொண்டதாகவும், அமைதி மற்றும் ஸ்திரத் தன்மையை மீட்பதற்கான நேபாள அரசின் முயற்சிகளுக்கு இந்தியாவின் ஆதரவை உறுதிப்படுத்தியதாகவும், சமூக ஊடகப் பதிவு ஒன்றில், திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். நேபாளத்தில் நாளை தேசிய தினம்

கொண்டாடப்படுவதை முன்னிட்டு நேபாள மக்களுக்கு அவர் தமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டார்.

<u>**திரைப்படம்**</u>

பிரதமர் திரு நரேந்திர மோடியின் வாழ்க்கையில், இளம் பருவத்தில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டு, தேசிய விருது பெற்ற, சலோ ஜீத்தே ஹைங் திரைப்படத்தை, பிரதமரின் 75-ஆவத பிறந்த நாளை ஒட்டி, நாடு முழுவதும், பெரும் எண்ணிக்கையிலான பள்ளிகள், மற்றும் 500 திரையரங்குகளில் திரையிட, மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை அமைச்சகம் ஏற்பாடு செய்துள்ளது. சுயநலமற்ற மக்கள் சேவை என்னும் சுவாமி விவேகானந்தரின் கொள்கையால் ஈர்க்கப்பட்ட ஒரு சிறுவனின் கதை பற்றிய இத்திரைப்படம், புதுச்சேரியில் இன்று மாலை 6 மணிக்கு, PVR திரையரங்கின் 3-ஆவது திரையில் திரையிடப்படுகிறது. வரும் 24-ஆம் தேதி வரை இக்குறும்படம் திரையிடப்படும்.

<u>**ஜிஎஸ்டி-ஜவுளி**</u>

பிரதமர் திரு நரேந்திர மோடி இவ்வாண்டு சுதந்திர தினத்தன்று, அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்களை, டெல்லி செங்கோட்டை கொத்தளத்தில் இருந்து அறிவித்தார். சாதாரண மக்களின் வாழ்வை எளிதாக்கும் வகையில் பல்வேறு துறைகளுக்கான வரி குறைப்பை, இம்மாதம் 3-ஆம் தேதி ஜிஎஸ்டி சபை அங்கீகரித்து, பிரதமரின் தொலை நோக்கு பார்வையை நிறைவேற்றியது. இதில் குறிப்பாக ஜவுளித் துறைக்கான, ஜிஎஸ்டி சீர்திருத்தங்கள் குறித்து இன்றைய தொகுப்பில் பார்க்கலாம்....

## ஜிஎஸ்டி-ஜவுளி

அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்களில், ஜவுளித் துறைக்கு வழங்கப்பட்டுள்ள வரி குறைப்பினால், சாதாரண மக்கள் மீதான வரிச்சுமை குறைகிறது. ஜவுளித் துறைக்கு தேவையான செயற்கை இழைகள் மீது, இதுவரை விதிக்கப்பட்டு வந்த 18 சதவிகித ஜிஎஸ்டி, தற்போது 5 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளது. செயற்கை இழை நூல் மீதான வரியும், 12 சதவிகிதத்தில் இருந்து 5 சதவிகிதமாக குறைக்கப் பட்டுள்ளதால், ஜவுளித் துறையில் உற்பத்தி செலவுகள் குறைந்து, சந்தைத் தேவையும், ஏற்றுமதியும் அதிகரிக்கும் என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். ஆயத்த ஆடைகள் மீதான வரியும் 5 சதவிகிதமாக குறைக்கப் பட்டுள்ளதால், நவநாகரீக ஆடை ரகங்களின் விலை குறைகிறது. இம்மாற்றங்களால் நடுத்தர மற்றும் குறைந்த வருவாய் பிரிவினர் பயன்பெறுவதுடன் சர்வதேச அளவிலான ஜவுளிச் சந்தையில் இந்தியாவின் போட்டித் திறன் அதிகரித்து, உலகின் முக்கிய ஜவுளி கேந்திரமாக இந்தியா மேம்படும் வாய்ப்புகள் வலுப்பெறும் என்பதும் குறிப்பிடத் தக்கது.

## புதுச்□ரி-□ட்டமன்றம்

புதுச்சேரியில் இன்று நடைபெற்ற சட்டமன்றக் கூட்டத் தொடரில், அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்களை வரவேற்றுத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. புதிய சீர்திருத்தங்களால் சாதாரண மக்கள் மீதான வரிச் சுமை குறைந்து பொருளாதாரம் வலுப்பெறும் என்று, முதலமைச்சர் திரு ரங்கசாமி இத்தீர்மானத்தின் மீது பேசுகையில் கூறினார். குடியரசு துணைத் தலைவராக பதவி ஏற்றுள்ள திரு சி பி ராதாகிருஷ்ணனுக்கு அவையில் வாழ்த்து தெரிவிக்கப்பட்டது. புதுச்சேரியில் வணிகம் புரிவதை எளிதாக்கும் மசோதாவும், இதே நோக்கத்துடன், இதர சட்டங்களை திருத்துவதற்கான மசோதாக்களும், இன்று, சட்டமன்றத்தில் தாக்கல்

செய்யப்பட்டன. முன்னதாக பிரான்சிஸ் போப்பாண்டவர், கேரள முன்னாள் முதலமைச்சர் அச்சுதானந்தன், ஜார்கண்ட் முன்னாள் முதலமைச்சர் சிபுசோரன், நாகாலாந்து முன்னாள் ஆளுநர் இல.கணேசன் ஆகியோரின் மறைவிற்கு அவையில் இரங்கல் தெரிவிக்கப்பட்டது. சட்டமன்றத்தின் கூட்டத் தொடரை 10 நாட்களுக்கு நடத்த வேண்டும் எனக் கோரி அவையில் சபாநாயகர் இருக்கை முன்பாக அமர்ந்து தர்ணாவில் ஈடுபட்ட திமுக மற்றும் காங்கிரஸ் உறுப்பினர்களை

## புதுச்□ரி-□ட்டமன்றம்

அவையில் இருந்து வெளியேற்ற, பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம் உத்தரவிட்டார். குடிநீர் பிரச்சனை குறித்து பேச அனுமதிக்கப் படாததால் அமளியில் ஈடுபட்ட சுயேட்சை உறுப்பினர் திரு நேருவும், அவைத் தலைவர் உத்தரவின் பேரில் அவையில் இருந்து வெளியேற்றப்பட்டார். இன்று தொடங்கிய புதுச்சேரி சட்டமன்றத்தின் கூட்டத் தொடர், இன்றே, காலவரையின்றி ஒத்தி வைக்கப்பட்டது.

## புதுச்□ரி-தணிக்கை

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில், மாநில அளவிலான மொத்த உள்நாட்டு உற்பத்தி, கடந்த 2023-24-ஆம் ஆண்டில், 47 ஆயிரத்து 902 கோடி ரூபாயாக, 7.16 சதவிகிதம் அதிகரித்துள்ளது. இது, அதற்கு முந்தைய ஆண்டில், 44 ஆயிரத்து 700 கோடி ரூபாயாக இருந்தது. தமிழ்நாடு-புதுச்சேரி பகுதிகளுக்கான முதன்மை தலைமை கணக்கு அதிகாரி திரு திருப்பதி வெங்கடசாமி, இன்று புதுச்சேரியில் செய்தியாளர்களிடம் இதைத் தெரிவித்தார். 2023-24-ஆம் ஆண்டிற்கான புதுச்சேரி அரசின் கணக்குப் பதிவேடுகளை ஆராய்ந்து, மத்திய கணக்குத் தணிக்கை அலுவலகம் தயாரித்துள்ள தணிக்கை அறிக்கை,

சட்டமன்றத்தில் தாக்கல் செய்வதற்காக, அரசிடம் வழங்கப் பட்டுள்ளதாக அவர் கூறினார். இந்த அறிக்கையில் இடம் பெற்றுள்ள தகவல்களின் படி, கடந்த நிதியாண்டில் புதுச்சேரி அரசின் வருவாய்ப் பற்றாக்குறை, 24 கோடி ரூபாயாகவும், நிதி பற்றாக்குறை, 463 கோடி ரூபாயாகவும் உள்ளது. மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் நிதிப் பற்றாக்குறையின் விகிதம், 0.97 சதவிகிதம் என்றும், இது 3 சதவிகித இலக்கிற்கு உட்பட்டதாகவே இருப்பதாகவும் திரு வெங்கடசாமி கூறினார். ஆயினும் புதுச்சேரி அரசு, வருவாய் மிகை மற்றும் நிதி மிகை நிலையில் இருந்து, வருவாய்ப் பற்றாக்குறை மற்றும் நிதிப் பற்றாக்குறை நிலைக்கு மாறி இருப்பது, கவனிக்கதக்கது என்றும் அவர் குறிப்பிட்டார்.

**வானிலை**

வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக இன்றைய தினம், தஞ்சை, நாகை, திருவாரூர், கடலூர். விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை உள்ளிட்ட மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வரும் 24-ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையே கடந்த 24 மணி நேரத்தில், காரைக்கால் உள்ளிட்ட இடங்களில் தலா 6 சென்டிமீட்டர், மற்றும் பத்துக்கண்ணு உள்ளிட்ட இடங்களில் தலா 5 சென்டிமீட்டர் மழை பதிவாகி உள்ளது.

**கிரிக்கெட்**

ஆசிய கோப்பைக்கான 20 ஓவர் கிரிக்கெட் போட்டித் தொடரில் இன்று இரவு 8 மணிக்கு,அபுதாபியில் நடைபெறும் பி-பிரிவு போட்டியில் ஆப்கானிஸ்தான்-இலங்கை அணிகள் மோத உள்ளன. இத்தொடரில், நேற்று இரவு நடைபெற்ற ஏ-பிரிவு போட்டியில் பாகிஸ்தான் அணி, 41 ரன் வித்தியாசத்தில் யுஏஇ அணிக்கு எதிராக வெற்றி பெற்றது.

**ரயில்வே**

நாட்டில் ரயில் விபத்துக்களின் வருடாந்திர எண்ணிக்கை, கடந்த 2013-14-ஆம் ஆண்டில் 170-ஆக இருந்த நிலையில், அரசின் தொடர்ச்சியான முயற்சிகள் காரணமாக, தற்போது இது, ஆண்டுக்கு 31-ஆக குறைந்துள்ளது. ரயில்வே அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் இன்று புதுடெல்லியில், இந்திய பொது விவகாரங்கள் பேரவைக் கூட்டத்தில் பேசுகையில் இதைத் தெரிவித்தார். ரயில்வே துறையில், பயணிகளின் பாதுகாப்பு தொடர்பான திட்டங்களுக்கு, ஆண்டுக்கு 1 லட்சத்து 30 ஆயிரம் கோடி ரூபாய் செலவிடப் படுவதாக அவர் கூறினார். ரயில்வே துறையில் தொழில் நுட்பங்களையும், பராமரிப்பு நடைமுறைகளையும் மேம்படுத்தும் திட்டங்களில், கணிசமான அளவில் முதலீடு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் கூறினார்.

**நிர்மலா**

ஐடிஐ தொழிற்பயிற்சி நிறுவனங்களை, செயற்கை நுண்ணறி சார்ந்த பயிற்சி மையங்களாக தரம் உயர்த்த, மத்திய அரசு, முழு நிதி உதவி வழங்கும் என, மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறி உள்ளார். இன்று புதுடெல்லியில், இந்திய தர மேலாண்மை அமைப்பின் வருடாந்திர கருத்தரங்கில் உரையாற்றிய அவர், தொழில் துறையின் தேவைகளுக்கு ஏற்ப, தொழிற் பயிற்சி நிறுவனங்களைத் தரம் உயர்த்த

அரசு முக்கியத் துவம் அளித்து வருவதாக தெரிவித்தார். கடந்த 2-3 ஆண்டுகளாக மத்திய பட்ஜெட்டில், மனித வளத்தின் திறன் மேம்பாட்டுப் பணிகளுக்கு அதிக நிதி ஒதுக்கப்படுவதாகவும், ஊக்கத் தொகையுடன் கூடிய பயிற்சி இளைஞர்களுக்கு வழங்கப்படுவதை அரசு உறுதிப்படுத்தி வருவதாகவும் அவர் கூறினார். இளைஞர்களுக்கான திறன் மேம்பாட்டு திட்டங்களில், தொழில் துறையினர் அரசுடன் இணைந்து செயல்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். நாட்டில் செயற்கை நுண்ணறிவு தொடர்பான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பணிகளையும் பயிற்சி திட்டங்களையும் ஊக்குவிக்கும் வகையிலான தகைசால் மையங்களை அமைக்க, ஐஐடி போன்ற சில உயர்கல்வி நிறுவனங்களை, அரசு இனம் கண்டுள்ளதாக நிதியமைச்சர் தெரிவித்தார். இத்தகைய பயிற்சிகளில், கல்வி, சுகாதாரம், நகர்புற வாழ்க்கை மற்றும் வேளாண் துறைக்கு முக்கியத் துவம் அளிக்கப்படும் என்று அவர் மேலும் கூறினார்.